**களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.355 Multidisciplinary International
doi : https://doi.org/10.63300/kijts10sp02.2026

**Vol. 10 No. 02, September 2026 (Special Issue) p35-43** | Available online at: www.ngmtamil.in
*Original Research, Paper – Peer Reviewed*

# எழுத்தாளர் இமையம் படைப்புகளில் நாட்டார் சமய மரபுகள்

Folk Religious Traditions in the Works of Writer Imayam

**கோ. கிருஷ்ணன்**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழாய்வுத்துறை,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்றது,
பார்பிரெட்டிப்பட்டி, தருமபுரி - **636905**

**முனைவர் அ. சுபா**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்றது,
பார்பிரெட்டிப்பட்டி, தருமபுரி - **636905**

**Abstract**

Folk religious traditions refer to modes of worship that are integral to the lives of the people and are transmitted across generations through oral narratives and rituals. These traditions encompass the worship of natural elements—such as trees, stones, rivers, and mountains—as deities; the veneration of deceased ancestors as protective spirits; the traditional worship of specific deities for the protection of the family or community; and the open-air worship of guardian deities like Ayyanar, Mariyammal, and Karuppasamy, often represented by stucco sculptures. The works of the writer Imayam vividly portray the lived realities of people from the marginalized sections of society. Furthermore, these folk religious traditions are prominently featured in his writings. This research paper aims to systematically examine and highlight these aspects.

**ஆய்வுச் சுருக்கம்**

நாட்டார் சமய மரபுகள் என்பது மக்களின் வாழ்வியலோடு இயைந்து, தலைமுறை தலைமுறையாக வாய்மொழியாகவும் சடங்குகளாகவும் நடத்தப்பட்டு வரும் வழிபாட்டு முறைகளைக் குறிக்கிறது. இது மரம் கல் ஆறு மலை போன்ற இயற்கை சக்திகளைத் தெய்வமாக வணங்குதல், இறந்த முன்னோர்கள் நம்மைப் பாதுகாக்கும் சக்திகள் என்று எண்ணி அவர்களை வணங்குதல்,

© 2014 The Author(s). This open access article is distributed under a Creative Commons Attribution (CC-BY) license 

குடும்பம் அல்லது இனத்தின் பாதுகாப்பிற்காகப் பாரம்பரியமாக ஒரு தெய்வத்தை வழிபடுதல்.ஊரைக் காக்கும் அய்யனார்இ மாரியம்மாள், கருப்பசாமி போன்ற சிறுதெய்வங்களைச் சுதைச் சிற்பங்களுடன் திறந்தவெளியில் வணங்குதல் போன்றவற்றைக் குறிக்கும். எழுத்தாளர் இமயம் அவர்களின் படைப்புகள் சமுதாயத்தில் கீழ் நிலையில் வாழும் மக்களின் யதார்த்த வாழ்வியலை படம் பிடித்துக் காட்டுவனவாக அமைந்திருக்கும். மேலும் அவருடைய படைப்புகளில் இந்த நாட்டார் சமய மரபுகள் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். அவற்றை முறையாக ஆராய்ந்து வெளிப்படுத்துவதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

**குறிப்புச் சொற்கள்**

சயனத்தடங்கள் - துஷ்டன் - உவகாரம் – ஏவல், பில்லி, சூனியம் வைப்பு.

**ஆய்வு அனுகுமுறை**

எழுத்தாளர் இமயம் அவர்களுடைய எழுத்துக்களில் காணப்படும் நாட்டார் சமய மரபு குறித்த தகவர்களை எடுத்து இயம்புவதால் இந்த ஆய்வுக்கட்டுரை எடுத்துக்கூறும் முறை ஆய்வில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு நோக்கம்**

ஒரு எழுத்தாளனிடம் அவனுடைய எழுத்தையும் அவன் சமுதாயத்தையும் பிரிக்க இயலாது. தான் வாழும் காலத்தில் ஏற்படுகின்ற சமுதாயச் சிக்கல்களை தன்னுடைய படைப்புகளில் வெளிப்டுத்தவும் தவற மாட்டான். அதே சமயம் அந்தச் சிக்கல்களுக்கான தீர்வையும் மிகத் தெளிவாக எடுத்துக்கூறுவான். இதன் அடிப்படையில் எழுத்தாளர் மயம் அவர்களின் படைப்புகளில் காணப்படும் நாட்டார் சமுக மரபினை ஆராய்ந்து விளக்குவதே இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

தன் இன மக்களின் வாழ்வியலை வாய்மொழியாக காலம் காலமாக விளக்கப்பட்டு வருவதே நாட்டார் சமய மரபாகும். இது கிராமபுற மக்களின் ஆன்மீகம், சமூகம் மற்றும் இயற்கையோர் அவர்களுக்கு இருந்த னக்கமான வாழ்வியலைக் காட்டுகின்றது. எழுத்து வடிவம் பெறாமல் மக்களால் பேசப்பட்டு வருபவை அனைத்தும் இந்தநாட்டார் சமய மரபு என்ற வகைகள் அடங்கும். பிறப்பு முதல் இறப்பு வரையிலான சடங்குகள் மற்றும் திருவிழாக்கள் ஆகியவை இதில் அடங்கும். சிறு தெய்வ வழிபாடு, கிராம தெய்வ வழிபாடுஇ நேர்த்திக்கடன் மற்றும் குலதெய்வ பூசைகள் போன்றவையும் இதில் அடங்கும். மக்கள் நேரடியாக கண்டு மகிழும் கலை வடிவங்களான கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், தெருக்கூத்து, வில்லுப்பாட்டு, கும்மி ஆகியவை இதில் முக்கியத்துவம் பெறும். சமூகப் பிணைப்புச் சார்ந்த செய்திகள், வரலாற்றுப் பதிவுகள் சார்ந்த செய்திகள், ஒழுக்கக் கட்டமைப்புகள் போன்றவை இதில் சிறப்புடன் இடம்பெறும். இத்தகைய நாட்டார் சமய மரபுகளை எழுத்தாளர்

இமயம் அவர்கள் தன்னுடைய படைப்புகளில் மிகத்தெளிவாக எடுத்துரைத்துள்ளார். அவற்றை முற்றாக ஆராய்ந்து விளக்குவதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

**எழுத்தாளர் இமையம்**

காலம்தோறும் பல்வேறு பொருண்மைகளில் இலக்கியங்கள் தோன்றிய நிலையில், இயந்திர மயமான இன்றைய காலகட்டத்திற்கு ஏற்ற இலக்கியமாக சிறுகதையும் நாவலும் திகழ்கின்றன. இதில் சிறுகதை என்பது குறுகிய கால நிகழ்வை வெளிப்படுத்தும் இலக்கியமாகவும், நாவல் என்பது நீண்ட நெடிய நிகழ்வை வெளிப்படுத்தும் இலக்கியமாகவும் திகழ்கின்றன. மாபாரதம், காப்பியங்கள் போன்றவற்றைப் படிப்பதற்கான கால அவகாசம் இல்லை என்று வருந்தும் நிலையைப் ளேபாக்குவதற்காக எழுந்ததே இந்த நாவல் இலக்கியம்.

இத்தகைய நாவல் மற்றும் சிறுகதை உலகில் சிறப்புபெற்றவர்கள் பல்லாயிரக் கணக்கானோர் இருப்பினும் எழுத்தாளர் இமையம் அவர்கள், இவர்கள் அனைவரினும் வேறுபட்டுத் திகழ்பவர். வெ. அண்ணாமலை என்னும் இயற்பெயர் கொண்ட இவர், தமிழ்நாட்டில் உள்ள கடலூர் மாவட்டத்தின் கழுதூர் என்ற ஊரில் 1964 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் தேதி பிறந்தார். முதுகலை பட்டம் பெற்ற இவர் பள்ளிக் கல்வித் துறையில் அரசுப் பள்ளி ஆசிரியராக விருதாசலத்தில் வசித்துவருகின்றார். இவருடைய மனைவி ச. புஷ்பவள்ளி அவர்களும் முதுநிலை ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவருக்குக் கதிரவன், தமிழ்ச் செல்வன் என்று இரண்டு மகன்கள் உள்ளனர்.

"கோவேறு கழுதைகள்" என்ற தலைப்பில் 1994 ஆம் ஆண்டு தன்னுடைய முதல் நாவலைத் எழுதத் தொடங்கிய இவர் இதுவரை 23 நாவல்கள் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் 2018 ஆம் ஆண்டு எழுதி வெளியிட்ட "செல்லாத பணம்" என்ற நாவலுக்கு 2020ஆம் ஆண்டு சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது.

**இமையம் அவர்களின் படைப்புலகம்**

எழுத்தாளர் இமையம் அவர்கள்,

1. கோவேறு கழுதைகள்
2. ஆறுமுகம்
3. செடல்
4. பெத்தவன்
5. எங் கதெ
6. செல்லாத பணம்
7. வாழ்க வாழ்க

8. இப்போது உயிரோடு இருக்கிறேன்
9. நெஞ்சறுப்பு

என்ற தலைப்புகளில் நாவல்களும்,

1. மண்பாரம்,
2. வீடியோ மாரியம்மன்,
3. கொலைச் சேவல்,
4. சாவுசோறு,
5. பெத்தவன்,
6. நறுமணம்,
7. நன்மாறன் கோட்டைக்கதை
8. தாலி மேல சத்தியம்
9. திருநீறு சாமி

என்ற சிறுகதைத் தொகுப்புகளையும் படைத்துள்ளார்.

மேலும், இவருடைய

1. கோவேறு கழுதைகள்
2. ஆறுமுகம், பெத்தவன்
3. சொல்லாத பணம்
4. எங் கதெ

ஆகிய படைப்புகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளன.

**இமையம் பற்றி சமகால புலவர்கள்**

ஒருவரைப் பற்றிப் பலரும் பேசும்போதுதான் அவருடைய பன்முகத்தன்மை வெளிப்படும். எழுத்தாளர் இமயம் அவர்கள் அவர் வாழ்ந்த சமகாலத்திலேயே பல்வேறு அறிஞர்களாலும், எழுத்தாளர்களாலும், தமிழ் ஆய்வாளர்களாலும் தமிழ் ஆர்வளர்களாலும் போற்றப்பட்டவர். பல்வேறு இளம் எழுத்தாளர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர். இவருடைய எழுத்துக்களைப் பார்த்து எழுத்துலகத்திற்கு வந்தவர்கள் ஏராலம். ஒடுக்கப்பட்ட மக்களின் ஒட்டுமொத்தக் குரலாக ஒலித்ததால், பலத்தரப்பட்ட மக்களாலும் கொண்டாடப்பட்டவர். தமிழ் எழுத்தாளர் உலகில் தன்னுடைய எழுத்துக்களின்மூலம் தனக்கென்று தனியான பாதையை வகுத்துக்கொண்டவர்.

இத்தகைய சிறப்புவாய்ந்த சமூக சீர்திருத்தவாதியான எழுத்தாளர் இமையம் அவர்களைப் பற்றி முப்பத்து மூன்று ஆண்டுகளாக பல்லாயிரக்கணக்கான நூல்கள் இருக்கக்கூடிய இடமான நூலகத்தில் பணியாற்றும் நூலகரான திரு அன்புகணேசன் சபாபதி அவர்கள்,

**“கால்நூற்றாண்டுக்கும் மேலாகத் தமிழ் எழுத்துலகில் இயங்கிவரும் இமையத்தின் முதல் நாவலான 'கோவேறு கழுதைகள்' வெளியானபோதே தமிழ் இலக்கிய உலகில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.**

**ஒடுக்கப்பட்டவர்களிலும் ஒடுக்கப்பட்டவர்களாக வாழும் புதிரை வண்ணார்களின் வாழ்க்கையையும் அவர்கள்மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகளையும் பதிவு செய்த 'கோவேறு கழுதைகள்' பல உரையாடல்களைத் தமிழ்ச் சமூகத்தில் எழுப்பியது.**

**'கோவேறு கழுதைகள்' நாவலில் இருந்து தொடர்ச்சியாகத் தன் எழுத்துகளில் எளிய மனிதர்களின் வாழ்க்கையையும், சாதியப்பிரச்னைகளையும் பதிவு செய்துவருகிறார் இமையம். இலக்கியத்தில் அரசியல்கூடாது, அது உன்னதப் படைப்பு என்ற மேட்டுக்குடிப் பார்வையில் இருந்து விலகி நிற்கும் இமையம் அரசியலை மறைபொருளாகவும் சமயங்களில் நேரடியாகவும் தன் கதைகளில் பதிவு செய்ய மறப்பதில்லை.”**

**(எழுத்தாளர் இமயம் பற்றி பல்வேறு அறிஞர்கள்- ப – 54)**

என்று குறிப்பிட்டுள்ளது கூர்ந்து நோக்கத்தக்கது.

தமிழ் இலக்கியத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் குரலையும், சமூக எதார்த்தத்தையும் துணிச்சலுடன் பதிவு செய்துவரும் வெ. அண்ணாமலை என்ற இயற்பெயர் கொண்ட எழுத்தாளர் இமையம் குறித்து சக எழுத்தாளரான சுந்தரராமசாமி அவர்கள்,

**“தமிழ் எழுத்துலகில் கடந்த நூறு ஆண்டுகால வளர்ச்சியில் இமயத்தின் கோவேறு கதைகள் நாவலுக்கு இணையானது வேறொன்றும் இல்லை”**

**(எழுத்தாளர் இமயம் பற்றி பல்வேறு அறிஞர்கள்- ப – 59)**

என்று புகழ்ந்துருகுகிறார்.

தலித் சிந்தனை எழுத்தாளர் என்று பலராலும் அறியப்படும் இராசு கௌதமன் அவர்களோ,

**“இமையத்தின் படைப்புகள் ஒடுக்கப்பட்ட விளிம்புநிலை மக்களின் அவலங்களை மட்டுமே முன்னிறுத்துவதாகவும், சாதிய ஒடுக்குமுறைகளை விட மேல்சாதியினர் புகழக்கூடிய வகையிலும் அமைந்திருக்கின்றது.”**

**(எழுத்தாளர் இமயம் பற்றி பல்வேறு அறிஞர்கள்- ப – 64)**

என்று விளக்குகிறார்.

ஒருவருடைய பலம் எது பலவீனம் எது என்று அவர்களே தெரிந்துகொள்ள தவறும் இன்றைய உலகில், ஒருவருடைய பலத்தையும் பலவீனத்தையும் மற்றவர்கள் அறிந்து சொல்வது என்பது மிகவும் வியக்கத்தக்க ஒன்று. இவ்வாறு மற்றவர்களைப் பற்றி ஆராயும் தன்மை ஒருவருக்கு வாய்க்கப்படுமேயாயின், அவ்வாறு கூறுபவர் அந்த நபரின் எழுத்துக்களை ஆரம்பம் முதல் இறுதி

வரை அணு அணுவாய் ஆராய்ந்தவராகவே இருக்கக்கூடும். இதன் அடிப்படையில் எழுத்தாளர் இமயம் அவர்களின் எழுத்துக்களைப் பற்றி இலக்கிய விமர்சகரான அரவிந்தன் அவர்கள்,

**“இமையத்தின் எழுத்துக்களில் ஆசிரியர் தலையீடு மிக அரிதாகவே காணப்படும். வட்டாரப் பேச்சு வழக்குகளையும், இயல்பான உரையாடல்களையும் கொண்டு கதாப்பாத்திரங்களைத் தங்களின் சுயத் தன்மையோடு வெளிவர அனுமதிப்பது இமையத்தின் பலம்” (எழுத்தாளர் இமயம் பற்றி பல்வேறு அறிஞர்கள்- ப – 66)**

என்று தன்னுடைய எழுத்துக்களால் எடைபோடுகின்றார்.

**இமையம் படைப்புகளில் நாட்டார் சமய மரபுகள்**

ஆரம்ப காலம்முதல் இன்றுவரை மனிதனுடைய வாழ்வில் சமயம் என்பது புறக்கணிக்க இயலாத ஒன்றாகவே இருந்துள்ளது. இயந்திரமயமான இன்றைய காலத்திலும் சமயம் அனைத்துப் பிரிவினரிடமும் ஆழமாகவே வேரூன்றியுள்ளது என்பதே மறுக்க இயலாத உண்மை. மனிதன் பல்வேறு மதகளைத் தனக்குள் வகுத்துக்கொண்டு பல்வேறு வழிபாட்டுமுறைகளை மேற்கொள்வதற்கும் இந்தச் சமயமே அடித்தளமாக அமைகின்றது என்பதை,

**“மதம் என்பது மூன்று அத்தியாவசிய அம்சங்களைக் கொண்டது. முதலாவது நம்பிக்கை, இரண்டாவது சடங்குகள், மூன்றாவது ஐதீகங்கள் இவற்றின்வழி வளர்த்தெடுக்கப்பெறும் சமூகக் கண்ணோட்டம் அல்லது உலக நோக்கு. ;இம்மூன்றும் ஒருங்கிணையும் பண்பாட்டிலிருந்தும், இலக்கியத்திலிருந்தும் பிரித்து நோக்க முடியாது” (கா.சிவதம்பி–தமிழிலக்கியத்தில் மதமும் மானுடமும் இலக்கியவரலாற்றாய்வு–ப-34)**

என்று சிவதம்பி விளக்கம் கூறுகின்றார்.

**நாட்டார் சமயம்**

தமிழ்ப் புனைக் கதைகளில் வட்டார மொழி எழுத்துக்கள் வலுவுடன் தோன்றி எழுபதுக்குப் பின்பாக பத்தாண்டுகளில் நாட்டார் பண்பாடும் சமயமும் கவனம் பெறலாயின. அதுவரை புனைகதையுலகில் புறக்கணிக்கப்பட்டுவந்த நாட்டார் தெய்வங்கள் சிறுகதைகள் வழியே இடம்பெறத் தொடங்கின. பொதுமக்களின் வாய்மொழி மரபை முன்னிருத்துவது ஒருவிதமான மாற்றுப் பண்பாட்டை முன்னெடுப்பதற்கான களமாகக் காணப்பட்டது. கிராமப்புற வாழ்வியல் மீதான ஏக்கம், ஆதிக்க சாதி எதிர்ப்பு, தாய்வழித் தலமைக்கான மீட்டுருவாக்கம் போன்ற பல நோக்கங்களுக்காக நாட்டார் தெய்வங்களின் கதைகள் பயன்படுத்தப்பட்டன.

தமிழ்ச் சமுதாயச் சூழலில் ஒழுக்கப்பட்ட மக்களைப் பற்றியும், வட்டாரப் பின்புலங்களோடு எதார்த்தமான நடமாடும் மாந்தர்களைக் கதைப் பின்னனியாகக் கொண்டு புனைவுகள் படைப்பதில் குறிப்பிடத்தக்கவராக இமயம் திகழ்கின்றார். அப்புனைவுகளில் நாட்டார் தெய்வங்களை மையமிட்டு நடைபெறும் நிகழ்வுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

சக மனிதர்களோடு பேசுவது போன்று நாட்டார் தெய்வங்களோடு நேரடியாகப் பேசுவது, தன்னுடைய துன்பமம், மகிழ்ச்சி போன்ற அனைத்து நிகழ்வையும் அத்தெய்வங்களோடு பங்கிட்டுக் கொள்வது என்று தங்களோடு சமமாக நினைத்துப் போற்றும் வழக்கம் இமையம் படைப்புகளின் கதை மாந்தர்களிடையே காணப்படுவதை,

**“குவாட்டரு பாட்டிலு, சிகரட்டு, எலுமிச்சங்கா, பூ பழமின்னு ஒனக்கு வேண்டிய எல்லாத்தையும் கொண்டாந்து படையல் போட்டான். எல்லாக் கருமாதியும் செஞ்சப்பின்னாலையும் எனக்கு ஏன் உத்தரவு கொடுக்க மாட்டங்குற? கைநெறையா பொருளு கெடைக்கணும், கேடைக்கறத்திலதான் பாதியக் கொண்டாந்து ஒனக்கு சூலம், மணி, அங்கவஸ்திரம், கோழகாவு, குவாட்டரு பாட்டுலுன்னு கல்லு கருமாந்தரம் எடுக்குறனே, அப்புறம் என்ன? எனக்கு ஏன் உத்தரவு கொடுக்காம லேட்டாக்குற? போன வெள்ளிக் கிழம வேப்பூர் சந்தக்கிப் போனன். பாவப்பட்ட சனியந்தான் மாட்டிச்சி. பாவப்பட்டதுன்னு நெனனச்சா நான் எப்பிடிச் சோறு திங்குறது? என் வயிறு மண்ணயா திங்கும்? ஒரு பவின்னு நெனச்சிக் கொண்டுபோயி கொடுத்தேன். தேஞ்சுப்போச்சி, மக்கிப்போச்சி, முக்கா பவுனுதான் தேறுமன்னு சொன்னான். கையில காசு வாங்குனன். மறுநாளு ஒனக்கு படையல் போட்டனா இல்லியா? நேரமாவறது பல்லியின் சத்தம் கேட்கிறதா என்று கவனமாகக் கேட்டான். சலிப்பு மேலிட ‘சயனத் தடங்கலோட போவக் கூடாதின்னு ஒனக்குத் தெரியாதா? என்று கேட்டான்”**

**(இமையம் - சாவுச்சோறு – ப – 47)**

என்ற வரிகளில் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

மக்களே பூசாரியாக இருந்து செயல்படுவது, இறைச்சி மது போன்றவற்றைப் பலியிட்டுப் படைப்பது, தங்களுடைய வாய்வழியாக வந்த சொற்களைக் கொண்டு போற்றிப் புகழ்ந்துப் பாடுவது, தன் பரம்பரையாக முன்னோர்கள் இட்டு வணங்கியதனால் தானும் இட்டு வணங்குவது, மனிதரிடம் தெய்வமாக இறங்கி அருள்வாக்குக் கூறுவது போன்ற நாட்டார் தெய்வ வழிபாடுகளில் தோன்றும் வழிபாட்டு முறைகளைத் தன்னுடைய படைப்புகளிலும் பல்வேறு இடங்களில் மிகவும் நுட்பமாகப் படைத்து மகிழ்ந்துள்ளார் எழுத்தாளர் இமையம் என்பதற்கு,

**“என்னா செய்யனும் சொல்லு. நீ சொல்றது கருப்பையாகிட்டே இங்கு உள்ளத மட்டும்தான் சொல்லனும். இது சாமி குடிகொண்டிருக்கிற எட. .இந்தப் பைய கோவக்காரன். துஷ்டன். ஆனா நல்லவங்களுக்கு மட்டுந்தான் உவகாரம் செய்வான். ஈடு மருந்து விச்சியிருந்தாலும், எல்லாத்தையும் சாம்பலாக்கிப்புடுவா. ஏவல், பில்லி, சூனியம் வைப்பு எடுக்கிறதிலேயும் வைக்கிறதிலியும் பெரிய சூரன் இந்தப்பய. மத்த சாமி மாரி இல்லெ இவின். மாயாஜாலக்காரன், நான் நில்லுன்னா நிப்பான். ஏன்னா இவ என்னோட எல்லெ என்னோட உத்தரவு இல்லாம அவன் இந்த எல்லையத் தாண்ட முடியாது. எங்க முப்பாட்டன் குமாரயிலிருந்து**

**இந்த ஊருக்கு வரும்போது குலசாமின்னு கருப்பையாவையும் கொண்டாந்து குடிவச்சாரு. அதனால என்னோட ஏவல்ல அவன் நின்னாவனும். என்னா ஒண்ணு, ரத்த வெறி பிடிச்ச பய. பலி கேப்பான். அவ்வளவுதான். அவனுக்கு வேண்டியதக் கொடுத்திட்ட நாம்ப சொல்ற மீற மாட்டான்"**

**(இமையம் - கொலைச்சேவல்-ப-69)**

என்ற வரிகளே சான்றாக அமைகின்றன.

ஒவ்வொரு உயிரின் தோற்றத்திற்கும் பெண்மையே முதன்மை. இதனை உணர்ந்ததன் காரணத்தினால்தான் பல அறிஞர்களும் பெண்ணின் பெருந்தக்க யாவுள, பெண்மையைப் போற்றுவோம், பெண்மை வாழ்க என்று கூத்திடுவேமடா, அறிது அறிது மங்கையராய்ப் பிறப்பதறிது என்றெல்லாம் புகழ்ந்துள்ளனர். இத்தகைய பெண்மை நினைத்தால் எதையும் செய்துவிடலாம். பெண்மை என்பது மென்மைதான். ஆனால் இது ஆண்களிடம் காணப்படும் வன்மையையும் தோற்கடிக்கச் செய்யும் ஆற்றல் படைத்தது.

உலகம் உருவாவதற்கும், உருவாகிய உலகம் இயங்குவதற்கும் காரணமாகச் செயல்படும் இத்தகைய பெண்மையை இரண்டாம் தரமாகவும், இழிந்த அடையாளமாகவும், போகப்பொருளாகவும் பார்த்துவரும் மரபினருக்கிடையில், வழிபடும் தெய்வங்களாகப் பெண்மையைப் போற்றும் வழக்கத்தைக் கடைபித்து வந்த நாட்டார் வழிபாட்டு முறையை,

**"பொன்னருவியினுடைய சாபத்திலிருந்து கோபத்திலிருந்து தப்பிப்பதற்கு வழி தேடுமாறு பெண்கள் புலம்ப ஆரம்பித்ததோடு அவர்களே பொங்கள் வைத்துப் படைத்தால் அவளுடைய கோபம் தணியும் என்று சொன்னார்கள். அதனால் ஊர்ப்பஞ்சாயத்து கூடியது. பஞ்சாயத்தில் ஒரு ஆள் தவறாமல் எல்லோருமே பொங்கல் வைத்துப் படைக்கலாம் என்று சொன்னார்கள். சிவன் கோயிலுக்கு எதிரிலுள்ள வீட்டுக்காரரான சிதம்பரம் பிள்ளை மட்டும் 'பறச்சிய எப்பிடியே சாமி ஆக்கிட்டீங்க' என்று சொன்னார். அவருடைய பேச்சு பஞ்சாயத்தில் எடுபடவில்லை. குடிக் தெருக்காரர்கள் பொங்கல் வைத்துப் படைக்க முடியாது. அதனால் பொன்னருவியினுடைய சொந்தக்காரர்களிடமே அந்தப் பொறுப்பை ஒப்படைக்கலாம் என்றும் பஞ்சாயத்தில் முடிவாகியது. பஞ்சாயத்தில் முடிவானபடிதான் பொட்டைக்குளக் கரையில் பொன்னருவிக்கு முதல் பொங்கல் படைத்தது."**

**(இமையம் - வீடியோமாரியம்மன் - ப- 119)**

என்ற வரிகளின் மூலம் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

**முடிவுரை**

தமிழ் இலக்கியத்தில் நாட்டார் மரபு சங்ககாலம் தொட்டே இருந்துவருகின்றது. நாட்டார் மரபுகளை இன்றைய காலத்தில் செவ்வியலுடன் கலந்த ஒன்றாக மாற்றும்போது அங்கே அழகியல் உச்சம் கொள்கின்றது. இந்த நாட்டார் சமய மரபு என்பது வெறுமனே தமிழ் மரபில் மட்டுமே

இருக்கின்ற ஒன்றல்ல. ஜெர்மனியில் தொழில்புரட்சிக்கு முந்தைய காலத்தில்கூட இதனைத்தான் நாடினர். ஹிட்லர்கூட அங்குள்ள மக்களைக் கட்டுப்படுத்த இந்த நாட்டார் மரபினைத்தான் நாடியுள்ளார். அத்துடன் நிறுத்திக்கொள்ளாமல் அதனைத் தன்னுடைய தேசியவாதத்துடன இணைத்தார். இதன்மூலமே தூய ஜெர்மணியவாதம் கட்டமைக்கப்பட்டது. எனவே இந்த நாட்டார் சமய மரபு என்பது சமுதாயத்தில் ஒரு முக்கிய அம்சம் என்பது யாராலும் மறுக்க இயலாத உண்மை. எழுத்தாளர் இமயம் அவர்கள் தன்னுடைய படைப்பில் இந்த நாட்டார் சமய மரபினைப் பல்வேறு இடங்களில் மிகத்தெளிவாகப் பதிவு செய்கின்றார். நாட்டார் சமய மரபில் மதம் என்பது எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை விளக்குகின்றார். சக மனிதர்களோடு பேசுவது போன்றே நம்முடைய முன்னோர்களாகிய தெய்வங்களோடு பேசும் முறையை விளக்குகின்றார். மேலும் தன்னுடைய துன்பம் மற்றும் மகிழ்ச்சி ஆகிய அனைத்து நிகழ்வினையும் அத்தெய்வங்களோடுப் பகிர்ந்துக் கொள்கின்றார். தன்னுடைய முன்னோர்களான நாட்டார் தெய்வங்களைத் தங்களுக்குச் சமமாக, தங்களோடு அன்றாடம் பழகுபவர்களாகப் போற்றும் மனப்பாண்மையையும் தன்னுடைய படைப்புகளில் பதிவு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆய்வுக்குத் துணை செய்த நூல்கள்.**

1. அன்புகணேசன் சபாபதி - இமயம் பற்றி -நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்- எண். 41-B, சிட்கோ தொழிற்பேட்டை (SIDCO Industrial Estate), அம்பத்தூர், சென்னை - 600098.
2. எழுத்தாளர் இமயம் பற்றி பல்வேறு அறிஞர்கள் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்- எண். 41-B, சிட்கோ தொழிற்பேட்டை (SIDCO Industrial Estate), அம்பத்தூர், சென்னை - 600098.
3. கா. சிவதம்பி – தமிழிலக்கியத்தில் மதமும் மானுடமும் இலக்கிய வரலாற்றாய்வு - பாரி நிலையம் - முதல் தளம், எண். 184, பிராட்வே சாலை (Broadway Road), மன்னாடி மெட்ரோ ரயில் நிலையம் அருகில், ஜார்ஜ் டவுன், சென்னை - 600001.
4. இமையம் - சாவுச்சோறு – கங்கை புத்தக நிலையம் - பழைய எண். 13, புதிய எண். 23, தீனதயாளு தெரு, பாண்டி பஜார், தி. நகர், சென்னை - 600017.
5. மையம் - கொலைச் சேவல் - பாரி நிலையம் - முதல் தளம், எண். 184, பிராட்வே சாலை (Broadway Road), மன்னாடி மெட்ரோ ரயில் நிலையம் அருகில், ஜார்ஜ் டவுன், சென்னை - 600001.
6. இமையம் - வீடியோமாரியம்மன் - பாரி நிலையம் - முதல் தளம், எண். 184, பிராட்வே சாலை (Broadway Road), மன்னாடி மெட்ரோ ரயில் நிலையம் அருகில், ஜார்ஜ் டவுன், சென்னை - 600001.